# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு

கதை தொகுப்பு

அடியேன்
கார்த்திகா சிவகுமார்



✿✿ இளையாழ்வானின் திருமண வாழ்க்கை :-

இளையாழ்வாருக்கு தஞ்சம்மாள் என்ற பெண்மணியுடன்
அவரது 16வது வயதில் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற ஒரு மாதத்திலேயே அவரது தந்தை அசூரிகேசவாச்சாரியார் இறந்துவிட்டார். இதனால், அவரது அன்னை காந்திமதி கவலையுடன் இருந்தார்.

🌻🌻 யாத்திரை புறப்படுதல் :-

இளையாழ்வானைக் கொல்ல வேண்டும் என்று அத்வைத ஆச்சாரியார் யாதவபிரகாசர் சைதித்திட்டம் தீட்டினார். தன் சிஷ்யர்களுடன் கலந்து ஆலோசித்தார். வடநாட்டிற்கு கங்கை யாத்திரை போகலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

யாதவப்பிரகாசரும் இளையாழ்வானை யாத்திரைக்கு வருமாறு அழைக்க, இளையாழ்வானும் தன் அன்னையிடம் யாத்திரைக்குச் செல்ல அனுமதி வாங்கினார். இளையாழ்வானின் அன்னையோ தந்தையை இழந்துவிட்டோம் என்று கலங்கிக்கொண்டிருக்கிறேன். இந்நேரத்தில் நீயும் என்னவிட்டு பிரிந்து செல்கிறாயா? என்று கவலையுடன் கூறினார். இளையாழ்வான் தன் அன்னையை சமாதானப்படுத்திவிட்டு வடநாட்டிற்கு யாதவப்பிரகாசருடன் குழுவாக கங்கை யாத்திரை சென்றார். யாத்திரைக்கு இளையாழ்வானின் மருமகனான கோவிந்தனும் சென்றார்.

🌿🌿 கோவிந்தன் இளையாழ்வானிடம் கூறுவது :-

கங்கை யாத்திரைக்கு அனைவரும் சென்றுவிட்டனர். இந்நேரத்தில் யாதவப்பிரகாசரின் சில சீடர்கள் ஒன்றாக கூடி கூடி இளையாழ்வானை கங்கையில் தள்ளி விட்டு கொல்வது பற்றி பேசிக்கொண்டிருந்தனர். இதனைக் கோவிந்தன் கேட்டுவிட்டார். உடனே, பதற்றத்துடன் இளையாழ்வானிடம் ஓடிச்சென்று "உங்களை இங்கே கங்கையில் தள்ளி விட்டுக் கொல்ல சதித்திட்டம் தீட்டுகிறார்கள். நீங்கள் உடனே வேறு எங்காவது புறப்பட்டுச் செல்லுங்கள். வேறு எங்கேயாவது சென்று உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று கூற, இளையாழ்வானும் புறப்பட்டு விட்டார்.

இளையாழ்வானும் புறப்பட்டுச் சென்று காடு, மலைகள் என எல்லாவற்றையும் கடந்து, இந்த பாதை எங்கே செல்கிறது? என்று கூட தெரியாமல் நடந்தார். இரவுப்பொழுது வந்தது. இளையாழ்வானுக்கு வழி தெரியவில்லை.

அப்போது இளையாழ்வான் ஒரு வேடுவன், வேடுவச்சியைக் கண்டார். இளையாழ்வான் கண்டவர்கள் யார்? என்பதை நாளைய பதிவில் அறியலாம்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

கங்கை யாத்திரை சென்றபோது கோவிந்தன் சொன்னதைக்கேட்டு தப்பித்துச் சென்றார் அல்லவா இளையாழ்வான். அவர் கண்ட காட்சியை இன்று அறியலாம்.

@@ வேடுவன் வேடுவச்சி :-

இளையாழ்வான் வழிதெரியாமல், கால் சென்ற பாதையில் ஸ்ரீமந்நாராயணனை மனதில் தியானித்துக்கொண்டு செல்கிறார். இரவுப்பொழுதாகிவிட்டது. அப்போது ஒரு வேடுவனையும், அவரது மனைவி வேடுவச்சியையும் காண்கிறார். அவர்கள் பயங்கரமான தோற்றம் உடையவர்களாக இருந்தார்கள். இருந்தாலும் கண்களில் கருணை வெள்ளம் ததும்பி இருந்தது.

அவர்கள் யார் என்று தெரியுமா? இளையாழ்வான் யாருடைய மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே, யாரை நினைத்துக்கொண்டே சென்றாரோ அவர்கள் தான். உலகத்துக்கே படியளக்கும் காஞ்சி வரதராஜப்பெருமாளும், பெருந்தேவித் தாயாரும் தான். இளையாழ்வான் வழி தெரியாமல் ஸ்ரீமந்நாராயணனை அழைத்துக் கொண்டே இருந்தார் அல்லவா!. தன்னை நம்பி தன்னுடைய திருநாமத்தை அழைத்த இளையாழ்வானுக்கு அருள் செய்ய வேண்டும் என்று நினைத்தார். பெருந்தேவித்தாயாருடன் தானும் அருள் செய்ய வந்துவிட்டார்.

அவர்களிடம் சென்று காஞ்சிபுரம் போக வேண்டும். வழி தெரிந்தால் சொல்லுங்கள் என்று கேட்கிறார். வேடுவனும், வேடுவச்சியும் நாங்கள் அங்கே தான் செல்கிறோம். நீங்கள் எங்களுடன் சேர்ந்து வாருங்கள் என்று சொல்ல, இளையாழ்வானும் அவர்களோடு நடந்து சென்றார். இருட்டு அதிகமாக இருந்ததால், பாதை தெரியவில்லை. இதனால் அனைவரும் இரவு தங்கிவிட்டு காலை எழுந்ததும் புறப்படலாம் என்று அங்கேயே படுத்துவிட்டார்கள். அப்பொழுது வேடுவச்சி குடிக்க தண்ணீர் வேண்டும் என்று தன் கணவனிடம் கேட்கிறாள். உலக உயிர்களை எல்லாம் காக்கும் ஜகந்மாதா, தன் கணவனிடம் குடிக்க நீர் கேட்கிறாள். காஞ்சி வரதராஜரான வேடுவனோ தன் மனைவியிடம், இங்கே ஒரு கிணறு இருக்கிறது. காலை எழுந்ததும் உனக்கு நீர் கொண்டுவந்து தருகிறேன் என்று சொன்னார். இதைக்கேட்ட இளையாழ்வானோ, காலை விடிந்ததும் முதலில் இந்த பெண்ணிற்குக் குடிக்க நீர் கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்று மனதில் எண்ணிக் கொண்டு உறங்கிவிட்டார்.

காலை விடிந்ததும் இளையாழ்வான் அருகில் இருக்கும் கிணற்றில் நீர் கொண்டு வந்து, இரவு உறங்கிய இடத்தினைப் பார்த்தார். வேடுவன், வேடுவச்சியைக் காணவில்லை. அருகில் இருப்பவர்களிடம் இது எந்த ஊர்? என்று கேட்க, அவர்களோ நீர் பிறந்த ஊரையே நீர் மறந்துவிட்டீரா? அதோபாரும், புண்ணிய கோடி விமானம் தெரிகிறது. அருகே கிணறு ஒன்று இருக்கிறது இது சாலக்கிணறு. இங்கே காஞ்சி வரதராஜப்பெருமாள் கோவிலில் வரதராஜப்பெருமாள் அருளாசி வழங்கிக் கொண்டிருக்கிறார். நீர் அவரை உள்ளே சென்று சேவித்துவிட்டு வாரும் என்றார்கள்.

இதைக்கேட்ட இளையாழ்வானுக்கு ஒரே திகைப்பு. வந்தவர்கள் வரதராஜரும், பெருந்தேவித்தாயாரும் என்று உணர்ந்து, கோவிலுக்குச் சென்று தரிசனம்

செய்தார். தரிசனம் செய்த பின் தன் அன்னை காந்திமதியிடம் சென்று யாத்திரையில் நடந்தவற்றையெல்லாம் கூறினார். காந்திமதியோ திருக்கச்சி நம்பிகளிடம் இதைப்பற்றி சொல்லி, அவர் சொல்லும் வழியைப் பின்பற்றுமாறு உரைத்தார். இந்த திருக்கச்சி நம்பிகள் யார்?

🌻✿ திருக்கச்சி நம்பிகள் :-

சென்னை அருகிலுள்ள பூவிருந்தவல்லியில், 1009ம் ஆண்டு வீரராகவர், கமலாயர் தம்பதிகள் வாழ்ந்தனர். திருமால் பக்தர்களான இவர்களுக்கு நான்காவதாக பிறந்தவர் 'கஜேந்திர தாசர்'. இவர் தான் பிற்காலத்தில் 'திருக்கச்சிநம்பிகள்' என்று பெயர் பெற்றார். கஜேந்திரதாசர் திருமாலின் மீது பக்தி கொண்டவராய் வளர்ந்து வந்தார்.

முதுமையை எய்தியதும் வீரராகவர், தன் பிள்ளைகள் நால்வருக்கும் சொத்தினை சமமாகப் பிரித்துக் கொடுத்தார். வைசியர்கள் என்பதால் செல்வத்தை மேலும் பெருக்கிக் கொண்டு செல்வந்தர்களாக வாழவேண்டும் என்று வீரராகவர் தன் பிள்ளைகளுக்கு அறிவுரை தந்தார். முதல் பிள்ளைகள் மூவரும் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டு வாழ்ந்தனர்.

கஜேந்திரதாசர் மட்டும் பணத்தைப் பற்றி எண்ணாமல் திருமாலுக்கு கைங்கர்யம் செய்வதிலேயே காலத்தைக் கழித்தார். ஒருநாள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த திருக்கச்சிநம்பிகளின் கனவில் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் வந்தார். கஜேந்திர தாசரே! நந்தவனம் அமைத்து, பூக்களைப் பறித்து மாலையாக்கி நாளும் புஷ்ப கைங்கர்யம் செய்வாயாக! உனக்கு எம் அருளைப் பூரணமாகத் தந்தோம்! என்று ஆணையிட்டார்.

பூவிருந்தவல்லியில் தந்தை கொடுத்த நிலத்தில் நந்தவனம் அமைத்தார் திருக்கச்சி நம்பிகள். பூக்களைப் பறித்து மாலையாக்கி, நடந்தே பூவிருந்தவல்லியில் இருந்து காஞ்சிபுரம் சென்று வரதராஜருக்கு மாலை அணிவித்து அழகுபார்த்தார். பிறகு சிலகாலங்கள் கழித்து ஆலவட்டம் கைங்கரியம் செய்து வந்தார். திருக்கச்சி நம்பிகளின் மேலான தூய பக்தியை கண்டு பெருமாளே நேருக்கு நேர் அவருடன் பேசத் தொடங்கிவிட்டார்

✿🍁 இளையாழ்வானும் திருக்கச்சிநம்பியும் :-

அப்படி ஒருசமயம் பூவிருந்தவல்லியில் இருந்து திருக்கச்சி நம்பிகள் காஞ்சிபுரம் நடந்து செல்கையில் இளையாழ்வான் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பார். அவரிடம் பேசுவார். திருக்கச்சி நம்பிகள் பிராமணன் அல்லாதவர். அதனால் இளையாழ்வானுடன் ஓரளவுடன் மட்டுமே பழகுவார். இளையாழ்வானுக்கோ திருக்கச்சி நம்பிகள் மீது அதிக ஆர்வம். ஏனெனில், இறைவனுக்கே ஆலவட்டம் கைங்கரியம் செய்கிறார் அல்லவா!.

அதுவும் இல்லாமல் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுடன் பேசுவார். அதனால் இளையாழ்வானுக்கு திருக்கச்சி நம்பிகளைக் கண்டாலே மரியாதை தானாக வந்துவிடும். சில காலங்கள் திருக்கச்சி நம்பிகள் காஞ்சிபுரத்திற்கு நடந்து வரும் பொழுது அவரைச் சந்திப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார் இளையாழ்வான்.

✿⚘ மோட்சம் உண்டா? :-

சிலகாலம் கழித்து, பூவிருந்தவல்லிக்கு வராமல், காஞ்சிபுரத்திலேயே தங்கி ஆலவட்டம் என்னும் விசிறி சேவை செய்யவும் செய்தார் திருக்கச்சி நம்பிகள். பெருமாளுடனேயே பேசும் சக்திமிக்க திருக்கச்சிநம்பியின் பாதத்தூளியை (கால் தூசு) வணங்குவதை வாடிக்கையாக கொண்டிருந்தார் ஒரு அன்பர். அவர் ஒருமுறை நம்பிகளிடம், சுவாமி! அடியேனுக்கு மோட்சம் உண்டா? என்று பெருமாளிடம் கேட்டுச் சொல்லுங்கள் என்றார். பெருமாளும், அவருக்கு மோட்சம் உறுதி, என்று பதில் தந்தார். திருக்கச்சி நம்பிகள் பெருமாளிடம், பெருமாளே! அடியேனுக்கும் மோட்சம் உண்டுதானே என்று கேட்டார். பெருமாளோ அவரிடம், அதெப்படி முடியும்! குருபக்தியோடு சேவை செய்து, பாகவத அபிமானம் பெற்றால் தான் வைகுண்டம் போக முடியும், என்று பதில் தந்தார். மறுநாளே குரு ஒருவருக்கு சேவை செய்யும் எண்ணத்தில் ஸ்ரீரங்கம் கிளம்பினார் திருக்கச்சிநம்பி. அங்கு குருவாக இருந்த திருக்கோஷ்டியூர் நம்பியிடம் மாடுமேய்க்கும் வேலையாளாக சேர்ந்துவிட்டார்.

✿🌿 திருக்கோஷ்டியூர் நம்பிகள் உணர்தல்:-

ஒருநாள் மழை கடுமையாகப் பெய்து கொண்டிருந்தது. மழையில் நனைந்த மாட்டிற்கு தன் ஆடையைப் போர்த்திவிட்டு தான் அதன் கீழ் படுத்துக் கொண்டிருந்தார். பசுக்கொட்டிலில் நடந்த இந்த நிகழ்வைக் கண்ட கோஷ்டியூர் நம்பிக்கு கண் களில் கண்ணீர் வந்துவிட்டது. தம்பி, ஏன் உன் ஆடையை பசுவுக்கு கொடுத்தாய்? என்று கேட்டார். மழையில் நனைந்தால் பசுவுக்கு சீதளம் உண்டாகும். அதன் பாலைப் பருகும் உங்களுக்கும் சீதளம் உண்டாகுமே. அதனால் தான் இப்படி செய்தேன், என்றார்.

திருக்கோஷ்டியூர் நம்பி, இவர் மாடுமேய்ப்பவர் அல்ல, பரமஞானி என்று உணர்ந்து கொண்டார். பிறகு ஆலவந்தார் என்ற யமுனாச்சாரியாரிடமும் சிஷ்யனாக சேர வேண்டும் என்று நினைத்தார் திருக்கச்சி நம்பிகள். அதுவும் நிறைவேறிவிட்டது.

ஆலவந்தரரருடன் ஸ்ரீரங்கத்தில் தங்கி ஸ்ரீரங்கத்திலும் பெருமாளுக்கு விசிறி வீசும் தொண்டு செய்து வந்தார் திருக்கச்சிநம்பி. ரங்கநாதர் அவரிடம், எனக்கு இங்கே காவிரிக்கரையோர காற்று சுகமாக வீசுகிறது. திருமலை (திருப்பதி) செல். அங்கு எனக்கு ஆலவட்டம் வீசு, என்று ஆணையிட்டார். எனவே திருக்கச்சி நம்பி, திருமலை சென்று வெங்கடேசப்பெருமாளுக்கு ஆலவட்டகைங்கர்யம் செய்தார். அங்கே பெருமாள், எனக்கு எதற்கு விசிறி? இங்கே, மலைக்காற்று சுகமாக இருக்கிறது. காஞ்சிபுரம் செல், வரதராஜப்பெருமாளுக்கு இந்த சேவையைச் செய், என்று அனுப்பி வைத்தார். அன்றிலிருந்து காஞ்சிபுரத்தில் ஆலவட்டம் வீசுவதையே கைங்கர்யமாகக் கொண்டிருந்தார் திருக்கச்சி நம்பிகள்.

அவரிடம் தான் இளையாழ்வானின் அன்னை காந்திமதி, பிரச்சினைகளைச் சொல்லி தீர்வு கேட்க இளையாழ்வானை அனுப்பி வைக்கிறார். இளையாழ்வான் திருக்கச்சி நம்பிகள் சந்திப்பு பற்றி நாளைய பதிவில் அறியலாம்.

பதிவு : 11 :-

✿⚘ திருக்கச்சிநம்பிகள் & இளையாழ்வான் :-

இளையாழ்வான் தாய் சொன்னது போல் திருக்கச்சி நம்பிகளைத் தரிசிக்கச் சென்றார். திருக்கச்சி நம்பிகள் காஞ்சி பேரருளானனுக்கு ஆலவட்டம் வீசும் பணியைச் செய்து கொண்டிருந்தார். பின்னர், திருக்கச்சி நம்பிகளிடம் கங்கை யாத்திரை சென்றதையும், அங்கு நடந்த சம்பவங்களையும் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். அனைத்தையும் சொல்லி தனக்கு தாங்கள் தான் குருவாக இருந்து "காலட்சேபம்" பண்ணியருள வேண்டும் என்று வேண்டினார்.

திருக்கச்சி நம்பிகளோ தன்னுடைய குலத்தினைக் காரணம் காட்டி, தான் அந்தணர் குலத்தில் பிறக்காத காரணத்தால், நான் உனக்கு காலட்சேபம் பண்ணுவது வர்ணாசிரமத்திற்கு எதிரானது என்று மறுத்துவிட்டார். காஞ்சி பேரருளானனுக்கு சாலக்கிணற்றிலிருந்து அபிசேகத்திற்கு நீர் எடுத்து வரும் பணியை செய்து வருமாறு கூறினார். இளையாழ்வானும் அவ்வாறே செய்தார்.

ஒருமுறை திருக்கச்சி நம்பிகள் ஆலவட்டம் வீசும் பணி செய்து முடித்தபின், ஆலயத்திலேயே அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட இளையாழ்வான் திருக்கச்சி நம்பிகளின் கால்களை அமுக்கி, குருவிற்கு செய்யும் பணியாக எண்ணி செய்தார்.

உறங்கி எழுந்த திருக்கச்சி நம்பிகள் இளையாழ்வானிடம் நீர் என்ன செய்தாலும் நான் உன்னை சிஷ்யானாக ஏற்கப்போவது இல்லை என்றார். இளையாழ்வானுக்கு எப்போதாவது திருக்கச்சி நம்பிகள் தம்மை சிஷ்யனாக ஏற்றுக் கொள்வார் என்று, நம்பிக்கையுடன் பேரருளானுக்கு சாலக்கிணற்றிலிருந்து நீர் எடுத்துவரும் பணியைச் செய்து வந்தார்.

✿❁ மீண்டும் யாதவப்பிரகாசரிடம் காலட்சேபம் :-

சில தினங்கள் கழித்து, வடநாட்டிற்கு கங்கை யாத்திரை பயணம் மேற்கொண்ட யாதவப்பிரகாசர் தன் சிஷ்யர்களுடன் திருப்புட்குழி வந்தார். இளையாழ்வான் காஞ்சிபுரத்தில் சாலக்கிணற்றிலிருந்து நீர் எடுத்துவரும் கைங்கரியம் செய்வதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தார். இளையாழ்வானை கரடி, புலி, விஷஜந்துகள் கொன்று விட்டதாகத் தானே நினைத்தோம், இவன் எப்படி இங்கு வந்தான் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

இருந்தாலும், தன் சிஷ்யர்களிடம் சொல்லி இளையாழ்வானை காலட்சேபத்திற்கு அழைத்துவருமாறு சொல்ல, இளையாழ்வானும் காலட்சேபம் நடக்கும் திருப்புட்குழிக்கு வந்து சேர்ந்தார். இன்றும் திருப்புட்குழி விஜயாசனப் பெருமாள் திவ்யதேசத்திற்குச் சென்றால், இளையாழ்வான் யாதவப்பிரகாசரிடம் காலட்சேபம் பண்ண இடத்தினை காணலாம்.

இளையாழ்வான் காலட்சேபம் கேட்க வந்ததும் வழக்கம்போல் காலட்சேபம் நடந்து கொண்டிருந்தது. இதனிடையே இளையாழ்வானின் அன்னை காந்திமதி இறைவனடி சேர்ந்தார். இளையாழ்வானுக்கு மிகுந்த துயரம். தாய் இறந்த பின்பும் காலட்சேபம் சென்று கொண்டிருந்தார்.

🌷🌀 ஆளவந்தார் காஞ்சிபுரம் வருதல் :-

திருக்கச்சி நம்பிகளின் குரு ஆளவந்தார் காஞ்சிபுரம் பேரருளாளனைத் தரிசிக்க வந்தார். அப்போது இங்கே இளையாழ்வான் என்பது யார்? அவர் எங்கே இருக்கிறார் என்று இராமானுஜரைப் பற்றி தன் சிஷ்யன் திருக்கச்சி நம்பிகளிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். அவர் யாதவப் பிரகாசரிடம் காலட்சேபம் செய்து கொண்டிருப்பதாகக் கூறினார். அவரிடம் போய் இவர் ஏன் காலட்சேபம் கேட்கிறார்? இவரை பிரித்து நம் வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார் ஆளவந்தார்.

அப்போது தான் இளையாழ்வான் சாலக்கிணற்றிலிருந்து கைங்கரியத்திற்கு நீர் எடுத்துச் சென்று கொண்டிருந்தார். அவரது திருமேனியைத் தூரத்தில் இருந்தவாறே தரிசித்த தரிசித்தார் ஆளவந்தார். இளையாழ்வானின் திருமேனி அழகையும், ஞானஒளி வீசும் கண்களையும் கண்டு வைணவ தர்மத்தை நிலைநாட்ட தகுந்த முதல்வர் இவரோ என்று நினைத்தார்.

பிறகு நேரே காஞ்சி பேரருளாளனான வரதராஜப்பெருமாளின் சன்னிதிக்குச் சென்றார். அங்கே "இந்த இளையாழ்வானை தனக்கு அடுத்து வைஷ்ணவ சம்பிரதாயத்தை உலகெங்கும் பரப்ப நியமிக்க வேண்டும். அவரை ஸ்ரீரங்கத்திற்கு அனுப்ப வேண்டும். அவர் தான் வைஷ்ணவ சித்தாந்தங்களை உலகெங்கும் பரப்ப வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அதன்பின் தன்னுடைய ஸ்ரீரங்கத்திற்குச் சென்று விட்டார் ஆளவந்தார்.

🍀🌼 மன்னன் மகளுக்கு மனநோய் :-

காஞ்சியை ஆண்ட மன்னனின் மகளுக்கு 'பிரம்ம ராக்ஷஸ்' பேய் (மனநோய்) ஒன்று பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தது. எந்த மந்திரத்திற்கும், தந்திரத்திற்கும் பணியவில்லை. அரசனோ மிகுந்த மனவேதனையுடன் யாரை அழைத்து அந்தப் பேயை ஓட்டுவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

மற்றவர்களின் சொல்லைக் கேட்டு யாதவப்பிரகாசரை அழைத்தார். யாதவப்பிரகாசரும் இளையாழ்வானுடன் வந்தார். யாதவப்பிரகாசரிடம் உம்முடைய மந்திர வலிமையால் அது நீங்கும்படி செய்ய வேண்டும் என்றார் மன்னன்.

யாதவப்பிரகாசரும் தன்னுடைய தவ வலிமையால் பிரம்மராக்ஷஸ் முன்பு மந்திரங்களை கூறினார். பிரம்மராக்ஷஸோ நீர் இங்கிருந்து உடனே போவீர் என்றது. உம்முடைய முற்பிறவி இரகசியங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். நீர் இப்பிறவியில் ஏதோ சில அதிர்ஷ்டமான காரணத்தினால் இன்று இந்தப் பொறுப்பில் இருக்கிறீர். உம்மால் எஎன்னை எதுவும் பண்ண முடியாது என்றது மன்னனின் மகள் உடம்பில் இருந்த பிரம்மராக்ஷஸ்.

இதைக்கேட்ட யாதவர், நான் இங்கே இருக்கக் கூடாது என்கிறாய். அப்போ நீ யார் சொல்லுக்குத்தான் கட்டுப்படுவாய்? யார் சொன்னால் நீ கேட்பாய்? என்றார். பிரம்மராக்ஷஸோ அங்கு நின்று கொனண்டிருந்த இளையாழ்வானைக் கை காட்டியது.

இளையாழ்வானும் வந்தார். இளையாழ்வான் பிரம்மராக்ஷஸிடம் நான் என்ன செய்தால் நீ இந்த பெண்ணின் உடம்பிலிருந்து வெளியேறுவாய்? என்றார். நீர் உம்முடைய திருவடிகளை எடுத்து என் தலையின் மீது வைத்தாலே போதும். நான் சென்று விடுவேன் என்றது.

அங்கிருந்த மன்னன் உட்பட மக்கள் பலருக்கும் பெரும் ஆச்சரியம். இளையாழ்வான் தன்னுடைய காலைத் தூக்கி பிரம்மராக்ஷஸ் தலையில் வைத்தார். என்ன ஆச்சரியம்! உடனே பிரம்மராக்ஷஸ் ஓடிவிட்டது. இதைக்கண்ட யாதவப் பிரகாசருக்கு மேலும் கோபம் அதிகமானது. எங்கே, தன்னுடைய கொள்கைகளைப் பரப்பி பெரிய ஆச்சாரியன் ஆகிவிடுவானோ என்று. குருவை சிஷ்யன் மிஞ்சி விட்டான் என்று அனைவரும் பாராட்டத் தொடங்கிவிட்டார்கள். இவற்றை எல்லாம் கேட்ட யாதவப் பிரகாசர் இளையாழ்வானிடம், 'இனி தம்மிடம் காலட்சேபம் பண்ண வர வேண்டாம் ' என்று கூறிவிட்டார்.

இனி இளையாழ்வான் யாரிடம் காலட்சேபம் கற்றார். மேலும், இளையாழ்வான் வாழ்க்கையில் என்ன மாற்றம் நடந்தது என்பதை இனிவரும் நாட்களில் அறியலாம்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

